சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc.,**
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 16 ம் நாள்)

**மேல்முறையீட்டு அசல் வழக்கு எண். 12/2025**
**CNR No.TNCB11-000384-2025**

ராஜம்மாள் ... மேல்முறையீட்டாளர் / 1 ம் பிரதிவாதி

/ எதிர் /

1. சண்முகவேல்
... 1 ம் எதிர்மனுதாரர் / வாதி

2. நடராஜ்
3. மாசிலாமணி ... எதிர்மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.492/2013 வழக்கில் 10.12.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண். 492/2013**

சண்முகவேல் ... வாதி

/ எதிர் /

1. ராஜம்மாள்
2. நடராஜ்
3. மாசிலாமணி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 18.04.2026 ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.N.D.சம்பத்குமார்,

எம்.எல்., எம்.பி.ஏ., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார், பி.ஏ., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகப்பட்டுள்ள நிலையிலும், பின்னிட்டு, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

1) இம்மேல்முறையீடானது பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.492/2013 வழக்கில் 10.12.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **விசாரணை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்:**

1ம் பிரதிவாதி, வாதியின் சிறிய தகப்பனார் முத்துசாமிகவுண்டரின் மகள் என்றும், 2ம் பிரதிவாதி, வாதியின் சகோதரர் என்றும், பிரதிவாதி வாதியின் இறந்து போன மற்றொரு சகோதரர் சின்னத்துரையின் மனைவி என்றும், தாவா A செட்யூல் சொத்துக்களை வாதி, 1ம் பரிதிவாதியின் சகோதரியான ரத்தினம் மற்றும் அவரின் கணவர் மயில்சாமி ஆகியோர்களிடம் 31.03.2004ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், வாதி க.ச.எண்.141/1 காலையில் ஒரு குறிப்பிட்ட சக்குபந்திக்குள் அமைந்துள்ள பு.ஏ.0.24 பூமியையும் மற்றும் க.ச.141/3 நெ.காலையில் பு.ஏ.2.08 பூமியையும் ஆக மொத்தம் பு.ஏ.2.32 கிரையம் பெற்றுள்ளார் என்றும், வாதியின் தகப்பனார் நாச்சிமுத்துகவுண்டரும், அவரின் சகோதரர் மேற்படி முத்துசாமிகவுண்டரும், அவர்களின் தகப்பனார் சுப்பேகவுண்டரும் 27.09.1963ம் தேதி எழுதி கொண்ட பாகப்பத்திரப்படி வாதி

கிரையம் பெற்ற சொத்துக்களும் வேறு சொத்துக்களும் மேற்படி முத்துசாமிகவுண்டருக்கு பாகத்தில் கிடைத்தவைகள் என்றும், மேற்படி முத்துசாமிகவுண்டருக்கு சின்னம்மாள், ரத்தினம், 1ம் பிரதிவாதி ராஜம்மாள் ஆகிய மூன்று பெண் மக்கள் உள்ளனர் என்றும், மேற்படி முத்துசாமிகவுண்டருக்கு கிடைத்த ஒரு பகுதி சொத்துக்களை பொருத்து 17.06.1966ம் தேதி செட்டில்மெண்ட் பத்திரமும், மற்றொரு பகுதி சொத்துக்களை பொருத்து 17.12.1968ம் தேதி மற்றொரு செட்டில்மெண்ட் பத்திரமும் தான் மேற்சொன்ன மூன்று பெண் மக்களுக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ரத்தினத்தின் கணவரான மயில்சாமிக்கு 21.07.1994ம் தேதியன்று சின்னம்மாளும், அவரின் மகன் கருப்புசாமியும் சேர்ந்து கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றும், மேற்படி மயில்சாமிக்கும் மேற்படி ரத்தினத்திற்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களையே வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், வாதி கிரயம் பெற்ற க.ச.141/3 காலைக்கு வடபுறத்தில் அமைந்துள்ள க.சா.141/2 நெ.காலையிலுள்ள பூமி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதிக்கு க.ச.141/1 காலையில் பாத்தியப்பட்ட 0.24 செண்ட் பூமியானது க.ச.141/1 காலையில் மேல்கோட்டில் தென்வடல் நீளியாக அமைந்துள்ளது என்றும், வாதிக்கு க.ச.141/1 காலையில் பாத்தியப்பட்ட பு.ஏ.0.24 பூமி க.ச.140/1 காலையில் 2, 3 பிரதிவாதிகளுக்கும், வாதியின் மற்றொரு சகோதரர் சிவசாமிக்கும் தனித்தனியாக பாத்தியப்பட்ட பூமிக்கு கிழபுறத்தில் அமைந்துள்ளது என்றும், வாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.141/3 காலை பூமியில் உள்ள பு.ஏ.2.08 பூமிக்கு வாதியின் பெயருக்கு தனி சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், க.ச.141/1 காலை பூமியில் உள்ள மொத்த விஸ்தீரணம் பு.ஏ.1.50ல் குறிப்பிட்ட சக்குபந்திக்குள் அமைந்துள்ள பு.ஏ.0.24 பூமி வாதிக்கு

பாத்தியப்பட்டதாலும், 1ம் பிரதிவாதிக்கு பு.ஏ.0.12 பூமி பாத்தியப்பட்டதாலும் வாதியும், வாதியின் சகோதரர்களும், வாதியின் தகப்பனாரும் செய்து கொண்ட 6.11.1974ம் தேதியிட்ட பாகப்பத்திரப்படி வாதியின் தகப்பனாருக்கு பாத்தியமாயிருந்து பு.ஏ.0.14 பூமி அவர் இறந்து விட்டதால் அவரின் வாரிசுகளுக்கு பாத்தியம் ஏற்பட்டுவிட்டதாலும் மேற்படி 6.11.1974ம் தேதியிட்ட பாகப்பத்திரப்படி ஒரு ஏக்கர் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாலும் க.ச.141/1 காலை பூமிக்கு வாதியின் பெயருக்கும் அந்த காலையில் உள்ள மற்ற உரிமையாளர்கள் பெயர்களுக்கும் கூட்டா பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3) க.ச.141/1 காலையில் ஒரு குறிப்பிட்ட சக்குபந்திக்குள் அமைந்துள்ள பு.ஏ.0.24 பூமியை வாதி கிரயம் பெற்றுள்ளதாலேயே வாதியின் பெயருக்கும் சேர்ந்து க.ச.141/1 காலை பூமிக்கு சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், க.ச.140/1 காலையில் வாதிக்கு பாக வகையிலும், கிரைய வகையிலும், உயில்படியும் மொத்த பு.ஏ.1.66 பாத்தியம் என்றும், வாதிக்கு க.ச.140/1 காலையில் பாத்தியப்பட்ட பு.ஏ.1.66 போக மீதி பூமி வாதியின் சகோதரர்களுக்கு பாத்தியம் என்றும், அதனால் க.ச.140/1 காலைக்கு வாதியின் பெயருக்கும், வாதியின் சகோதரர்கள் பெயருக்கும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், க.ச.141 காலை பூமி க.ச.141/1, 141/2,141/3 என உட்பிரிவு ஆகியுள்ளது என்றும், க.ச.140 காலை பூமி க.ச.140/1, 140/2, 140/3 என உட்பிரிவு ஆகியுள்ளது என்றும், வாதி தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரம், வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றை பார்த்தாலேயே தாவா A செட்யூல் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியம் என்பதும் வாதியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்பதும் தெரியவருகிறது என்றும், தாவா B செட்யூல் வண்டிதடம் வாதிக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் மற்றும் வாதியின் சகோதரர் சிவசாமிக்கும் 6.11.1974ம் தேதியிட்ட பாக

பத்திரப்படி பாத்தியப்பட்ட கிழமேல் வண்டிதடம் என்றம், பாகப்பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட சொத்துக்களை வாதியின் தாயாரிடம் கிரையம் பெற்ற சொத்துக்களையும் தாவா B செட்யூல் வண்டித்தடத்தின் மூலமாக தான் வாதி அடைந்து அனுபவித்து வருகிறார் என்றும், B செட்யூல் வண்டிதடத்தின் ஒரு பகுதியான க.ச.140/1 காலையில் தென்கோட்டில் செல்கிற வண்டிதடத்தின் தென்புறத்தில் 1ம் பிரதிவாதியின் பூமி அமைந்துள்ளது என்றும், வாதி 2, 3 பிரதிவாதிகள் மற்றும் வாதியின் மற்றொரு சகோதரர் சிவசாமி ஆகியோர் தாவா B செட்யூல் வண்டி தடத்தை வாதி உபயோகிப்பதற்கு இடையூறு செய்ததால் அ.வ.எண்.196/2003 என்ற எண்ணில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் 06.04.2010ம் தேதியன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4) மேற்படி அ.வ.எண்.196/2003 வழக்கில் தாவா B செட்யூல் வண்டிதடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அ.வ.எண்.196/2003 வழக்கில் தீர்ப்பு வழங்கிய பின் 2, 3 பிரதிவாதிகள் வாதியுடன் உள்ள முன் விரோதத்தால் 1ம் பிரதிவாதியை தூண்டிவிட்டு 1ம் பிரதிவாதி தாவா B செட்யூல் வண்டிதடத்தில் வாதியின் அனுபோகத்திற்கு பல வகைகளிலும் இடையூறு செய்து வருகின்றனர் என்றும், தாவா A செட்யூல் சொத்துக்களில் ஒரு பகுதியான க.ச.141/1 காலையில் உள்ள 0.24 செண்ட் பூமியை பிரதிவாதிகள் ஆக்கிரமிக்க முயற்சி செய்து வாதியின் அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருகிறார்கள் என்றும், 15.10.2013ம் தேதியில் வாதி தாவா A செட்யூல் சொத்துக்களையும் மற்றும் B செட்யூல் வண்டித்தடத்தையும் அனுபவிப்பதை 1ம் பிரதிவாதி அழிக்க முயன்றார் என்றும், எனவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஏற்கனவே B செட்யூல் வண்டிதடம் குறித்து 2, 3 பிரதிவாதிகள் மீது நிரந்தர

உறுத்துக்கட்டளை மாண்புமிகு இந்நீதிமன்றத்தால் அ.வ.எண்.196/2003 வழக்கில் வழங்கப்பட்டுள்ளதால் தாவா B செட்யூல் வண்டிதடம் குறித்து 1ம் பிரதிவாதி மீது மட்டும் பரிகாரம் கோரியுள்ளார் என்றும், தாவா B செட்யூல் வண்டிதடத்தில் வாதியின் அனுபவ சுவாதீனத்திற்கு 1ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) <u>**விசாரணை நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்:—**</u>

வாதியின் தகப்பனார் நாச்சிமுத்துக் கவுண்டரும் பிரதிவாதியின் தகப்பனார் முத்துசாமிக் கவுண்டரும் சகோதரர்கள் என்றும், மேற்படி நாச்சிமுத்துக் கவுண்டரும், முத்துசாமி கவுண்டரும் தங்களுக்கு பாத்தியப்பட்டிருந்த பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களான ஜல்லிபட்டி கிராம க.ச.140, க.ச.141 மற்றும் இதர க.ச.139, 171, 173 சொத்துக்களை 27.09.1963ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பிரித்துக் கொண்டனர் என்றும், இதில் நாச்சிமுத்துக் கவுண்டருக்கு க.ச.141ல் தென்புறம் கிழமேலாக பு.ஏ.1.14ம் முத்துச்சாமி கவுண்டருக்கு வடபுறம் கிழமேலாக பு.ஏ.3.48 ஒதுக்கப்பட்டது என்றும், அதே போன்று க.ச.140ல் வடபுறம் பு.ஏ.4.25 பூமி நாச்சிமுத்துக் கவுண்டரும், தென்புறம் பு.ஏ.1.51ம் க.ச.139ல் தென்புறம் பு.ஏ.0.85 பூமியும் முத்துசாமிக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டு அவரவர் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றும், பிரதிவாதியின் தகப்பனார் முத்துச்சாமிக் கவுண்டருக்கு பிரதிவாதி மற்றும் சின்னம்மணி, ரத்தினம், நல்லம்மாள் ஆகிய பெண்மக்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், மேற்படி முத்துச்சாமிக் கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரதிவாதிக்கும் மற்ற சகோதரிகள் சின்னம்மணி, ரத்தினம் ஆகியோருக்கு

1.06.1966 தேதியிட்ட பத்திரப்படியும் பின்னிட்ட 17.12.1968 பத்திரப்படியும் மாற்றிய செட்டில்மெண்ட்படி க.ச.139 ல் 0.40 ம், க.ச.140 ல் 0.75 ம், க.ச.141–ல் 3.48 ம் க.ச.138 ல் 1.45–ம் பாத்தியமாகிறது என்றும், பின்னர் பிரதிவாதியும் அவரது சகோதரிகளும் தங்களுடைய பூமிகளை தங்கள் வசதிக்கு தனித்தனியாக பிரித்து அவரவர் பூமிகளை தனித்தனியாக சுவாதீனம் செய்து அனுபவித்து வந்ததாகவும், இந்த பிரதிவாதியின் பூமி க.ச.140/2, க.ச,141/2 எனவும், மற்ற சகோதரிகளின் பூமிகள் க.ச.140/3 எனவும் உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது என்றும், பிரதிவாதி மற்றும் சகோதரிகளின் கிழபுற க.ச.141 பூமியிலிருந்து மேல்புற க.ச.140, 139 பூமிகளுக்கு பைப்லைன் மற்றும் வண்டித்தடம் PAP தண்ணீர் செல்ல க.ச.141 காலையில் மேல்கோட்டில் பொதுவாக பு.ஏ.0.36 பூமி வைக்கப்பட்டு எல்லோரும் பொதுவாக பைப்லைன் மற்றும் வண்டித்தடத்திற்காக உபயோகமும் தென்னையும் பயிரிட்டும் அனுபவித்து வந்ததாகவும் பொதுவாக இருந்த க.ச.141/1 ல் இந்த பிரதிவாதியின் கிரையம் பெற்ற வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவாக பாத்தியம் உள்ளது என்றும், க.ச.141 ல் மேல்கோட்டிடல் தென்வடலாக பு.ஏ.0.36 பிரதிவாதி மற்றும் அவரது சகோதரிகளுக்கும், தென்புறம் கிழமேலாக உள்ள பு.ஏ.1.14 பூமி நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகளான வாதிக்கும் மற்றவர்களுக்கும் ஆதியில் பாத்தியப்பட்டது என்றும், அதுவே க.ச.141/1 பு.ஹெக்.0.61.0 அல்லது பு.ஏ.1.50 என உட்பிரிவு ஆகியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) பிரதிவாதி தன்னுடைய க.ச.141/1 காலை கிழகோட்டில் வடபுறமாக உள்ள கிணற்றிலிருந்து நிலத்தடி குழாய் மூலம் க.ச.141/1, க.ச.141/3 வழியாக கொண்டு சென்று தன்னுடைய க.ச.140/2 காலை பூமிக்கு கடந்த 25 வருடங்களாக தண்ணீர் கொண்டு சென்று பாய்த்தும் தற்போது தென்னை

கன்றுகளுக்கு தண்ணீர் பாய்த்து வருகின்றார் என்றும், இந்த நிலையில் தாவா ஏ செட்யூல் 2வது அயிட்ட க.ச.141/1 காலையில் பொதுவாக உள்ள பூமியை நான்கு எல்லைகள் கொண்டு பு.ஏ.0.24 பூமியை பிரதிவாதியின் சகோதரி ரத்தினம் மற்றும் மற்ற சகோதரி சின்னமணியிடம் கிரையம் பெற்ற மயில்சாமியிடம் 31.03.2004 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது சட்ட விரோதமானது என்றும், உண்மையில் பிரிபடாத க.ச.141/1 காலை பூமியை பிரிபட்டு தனி சுவாதீனம் இருந்ததாக கிரையப் பத்திரத்தில் தெரிவித்திருப்பது சரியானதல்ல என்றும், அது இந்த பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாது என்றும், வாதி தாவா ஏ செட்யூல் 2வது அயிட்ட க.ச.141/1ல் உண்மையில் அதன் மற்ற கூட்டுரிமையர்கள் மீது உறுத்துக்கட்டளை கோருவது சரியானதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3) வாதி வேண்டுமென்றே க.ச.141/1, 141/3 காலைகளின் வழியாக செல்லும் இந்தப் பிரதிவாதியின் லாரி, வண்டி, வாகனங்கள் சென்று வரும் வண்டித்தட பாத்தியத்தையும் மேற்படி காலைகளின் வழியாக செல்லும் நிலத்தடி பைப்லைன் பாத்திய உரிமைகளை மறைத்து உள்நோக்கத்துடன் உறுத்துக்கட்டளை கோரியுள்ளார் என்றும், தாவா பி செட்யூல் வண்டித்தட சொத்து விபரம் தவறானது என்றும், க.ச.141/1ல் பொது வண்டித்தடம் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்திருப்பது தவறு என்றும், வாதி தான் பிரதிவாதியின் க.ச.140/2 காலை பூமியில் இடையூறு செய்ய முற்படுகின்றார் என்றும், வாதி ஜல்லிபட்டி கிராமம் க.ச.141/3 காலை பூமிகளை மட்டும் கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கிரையத்தில் பிரதிவாதிக்கும் அவரது சகோதரிகளுக்கும் கூட்டாக இருந்த க.ச.141/1 பூமியில் அறுதியிட்டு நான்கெல்லைகள் குறிப்பிட்டு 24 சென்ட் பூமி உள்ளதாக தெரிவித்துள்ளது தவறானது என்றும், மேற்படி பத்திரத்தில் கொடுக்கப்படாத வண்டித்தடத்தை

உள்ளதாக தெரிவித்து தாவா பி செட்யூல் என்பதாக குறிப்பிட்டு அதில் பாத்தியம் கோரியிருப்பது தவறானது என்றும் கூறப்பட்டுள்ளது.

3.4) தாவா பி செட்யூலாக குறிப்பிடப்பட்ட வண்டித்தடம் வாதியால் கற்பனையாக இல்லாத பாத்தியத்தை உருவாக்கி காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், க.ச.141/1 காலை பூமி இந்த பிரதிவாதிக்கும் மற்றும் வாதி உள்பட நாச்சிமுத்துக் கவுண்டரின் அனைத்து வாரிசுகளுக்கும் உரிமையுள்ள இடம் என்றும், வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் தவிர மற்ற நாச்சிமுத்துக் கவுண்டரின் மனைவி செல்லம்மாள், மருமகள் பெரியம்மணி, மக்கள் சிவசாமி, சம்பூர்ணம், பேத்தி மனோன்மணி ஆகியோரும் இந்த தாவாவிற்கு அவசிய நபர்கள் என்றும், அவர்கள் அனைவருக்கும் க.ச.141/1 காலையில் பாத்தியம் உள்ளது என்றும், க.ச.141/1ல் மொத்தம் பு.ஏ.1.50ல் இந்த பிரதிவாதிக்கு பிரிபடாத பு.ஏ.0.12ம் வாதிக்கு 2004 கிரையத்தில் பிரிபடாத பு.ஏ.0.24ம், வாதி உட்படி நாச்சிமுத்துக் கவுண்டரின் வாரிசுகளுக்கு பிரிபடாத பு.ஏ.1.14ம் பாத்தியம் உள்ளது என்றும், இதனை மறைத்து வாதி பொய்யான விபரங்களுடன் பிரதிவாதியின் பைப்லைன் தட பாத்தியங்களை தெரிவிக்காமல் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி க.ச.140, க.ச.141 காலைகளில் உள்ள பூமிகளில் தன் பாத்திய உரிமைகள் பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிவித்து அதனை இடையூறு செய்ய முற்படக்கூடாதென இந்த பிரதிவாதி 06.12.2013 தேதியில் வாதிக்கும் மற்ற நாச்சிமுத்துக் கவுண்டரின் வாரிசுகளுக்கும் அறிவிப்புக் கொடுத்து அதற்கு பொய்யான விபரங்களுடன் வாதி பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றும், அதில் க.ச.141/1 காலை பூமி பொதுவாக உள்ளதை மறுத்துள்ளார் என்றும், வாதியின் க.ச.141/1ல் தனி பாத்திய உரிமையை இந்த பிரதிவாதி தெளிவாகவும் குறிப்பாகவும் மறுத்துள்ள நிலையில் தாவா ஏ செட்யூல் 2வது அயிட்ட சொத்தில் தனது பாத்தியத்தின் உரிமையை விளம்புகை

செய்யாமல் உறுத்துக்கட்டளை கோரியிருப்பது சரியானதல்ல என்றும், தாவா ஏ செட்யூல் 2வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ள க.ச.141/1 சொத்து பிரிபடாத கூட்டான சொத்தாக உள்ளதாலும் தாவா பி செட்யூல் வண்டித்தட பாத்தியம் வாதிக்கு இல்லாததாலும் தாவாவிற்கு அவசிய நபர்கள் கட்சி சேர்க்கப்படாததாலும் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. **<u>விசாரணை நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

பி செட்யூல் வண்டித்தடத்தை வாதி உபயோகிப்பதற்கு இடையூறு செய்ததால் நீதிமன்றத்தில் அ.வ.எண்.196/2013 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து தீர்ப்பு பெற்றுள்ளார் என்பது சரியல்ல என்றும், மேற்படி தீர்ப்பு ஒருதலைப்பட்டசமாக பெற்ற தீர்ப்பு அதை ரத்து செய்ய இந்த பிரதிவாதி மனுக்கொடுத்து மேற்படி மனு நிலுவையில் உள்ளது என்றும், பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியை தூண்டிவிட்டு தாவா பி செட்யூல் வண்டித்தடத்தில் வாதியின் அனுபோகத்திற்கு பலவகையிலும் இடையூறு செய்து வருகின்றனர் என்பதும், 15.10.2013ல் வாதி பி செட்யூல் தடத்தை அனுபவிப்பதை தடுக்க முயன்று அழிக்க முயன்றனர் என்பதும் பொய் என்றும், உண்மை நிலவரம் யாதெனில் வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் நாச்சிமுத்துக் கவுண்டரும், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் முத்துச்சாமி கவுண்டரும் தங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களான புல எண்.139, 140, 141, 171, 173 விவசாய பூமிகளை 27.09.1963 பாகப்பத்திரப்படி பாகம் செய்து கொண்டனர் என்றும், அதன்படி நாச்சிமுத்துக் கவுண்டருக்கு தனிச்சொத்துக்களும் முத்துச்சாமி கவுண்டருக்கு தனிச்சொத்துக்களும் ஒதுக்கப்பட்டு அவரவர் சொத்துக்களுக்கு என தனி வழிதடபாத்தியங்களும்

கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வாதி முத்துச்சாமிக் கவுண்டரின் வாரிசான 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா ஏ செட்யூல் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அவ்வாறு கிரையம் பெற்ற ஏ செட்யூல் சொத்திற்கு வாதி நாச்சிமுத்து கவுண்டர் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கென விடப்பட்டுள்ள பி செட்யூல் வண்டித்தடத்தில் எவ்வாறு உரிமைகள் கோர இயலும் என்பதை வாதி தனது பிராதில் விளக்கம் கொடுக்கவில்லை என்றும், மேலும் வாதி கிரையம் பெற்ற நபர்களுக்கு தாவா ஏ செட்யூல் சொத்துக்களுக்கு எவ்வாறு தடபாத்தியம் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தையோ அது வாதியின் கிரையப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதையோ பிராது மற்றும் சொத்துவிபரத்திலும் தெரிவிக்கவில்லை என்றும், எனவே தாவா ஏ செட்யூல் சொத்துக்களுக்கு தாவா பி செட்யூல் தடம்தான் வழி என்பதை தகுந்த பத்திரங்களின் மூலம் தெளிவுபடுத்தாமல் வாதி வழக்கு தொடர அருகதை இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

4.2) நாச்சிமுத்துக் கவுண்டரின் வாரிசுகளுக்குள் 06.11.1974 ம் தேதி பாகம் ஏற்பட்டபோது நாச்சிமுத்துக் கவுண்டர் உயிருடன் உள்ளார் என்றும், ஆனால் நாச்சிமுத்துக் கவுண்டரை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு வாதி இந்த பிரதிவாதிக்கு காப்பாளராக இருந்து தனது சவுகரியத்திற்கு ஒரு பாகப்பத்திரத்தை ஏற்படுத்தினார் என்றும், அவ்வாறு பாகப்பத்திரம் 06.11.1974 ல் ஏற்பட்டபோது பாகஸ்தர்களுக்கு வண்டிப்பாதை என பொதுவாக தென்வடல் பாதையிலிருந்து 140, 141 நெ. காலை வழியாக நம் அனைவருடைய கால்நடை வண்டி வாகனாதிகள் ஆள்கோட்டேர் வகையராக்கள் போக்குவரத்து பாத்தியம் உண்டு என எழுதப்பட்டது என்றும், அவ்வாறு அனுபவிப்பதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டதாலும் 2003 ம் ஆண்டில் வாதி மற்றும் இந்தப் பிரதிவாதி குடும்பத்திற்குள் வண்டிப்பாதையைப் பொறுத்து ஒரு சமரசம் ஏற்பட்டு அதன்படி

தாவா இ செட்யூல் வண்டிப்பாதை தென்வடல் இட்டேரியிலிருந்து பாகஸ்தர்களின் கடைசி பங்கு சொத்துவரை அமைக்கப்பெற்று அதனை பொதுவாக வைத்து அனுபவிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், இவ்வாறுதான் தாவா பி செட்யூல் வண்டிப்பாதை உருவானதே தவிர வாதி கூறியுள்ளவாறு 06.11.1974 பாகப்பத்திரப்படி தாவா பி செட்யூல் தடம் ஏற்படுத்தப்படவில்லை என்றும், இந்த விபரங்களை இந்தப் பிரதிவாதி வாதி தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.196/2003 வழக்கிற்கு எதிர்உரை தாக்கல் செய்தபோது விரிவாக தெரிவித்துள்ளார் என்றும், மேற்படி பொதுவண்டித்தடம் ஏற்பட்டபோது அதிலிருந்து பிரதிவாதியின் பங்கு அமைந்துள்ள புல எண்.139 பூமிகளுக்கும் செல்ல வண்டித்தடம் ஏற்படுத்தப்பட்டது என்றும், இந்நிலையில் அ.வ.எண்.196/2003 வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரம் முன்பு வாதி பூமி வழியாகச் செல்லும் பொது வண்டித்தடத்தை அழித்து இந்தப் பிரதிவாதி புலஎண்.139 ல் உள்ள தன் பூமிகளுக்குச் செல்வதை தடுத்துவிட்டார் என்றும், மேற்படி காரியங்களால் பிரதிவாதி தனது புல எண்.139 ல் உள்ள பூமிகளுக்கு செல்லவிடாமலும் விவசாயம் செய்யவிடாமலும் இடைஞ்சல் செய்து வருகிறார் என்பது உண்மை என்றும், எனவே வாதிக்கு தாவா ஏ செட்யூல் சொத்துக்களுக்குச் செல்ல தாவா பி செட்யூல் சொத்துக்களில் தடபாத்தியங்கள் இல்லாதபோது எப்படியேனும் ஒரு தடபாத்தியத்தை உற்பத்தி செய்ய வேண்டி பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5. அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி

விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. <u>விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட எழுவினாக்கள் விவரம்:–</u>

1. தாவா 'ஏ' இலக்கச் சொத்தினைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத் தகுதி உடையவரா?

2. தாவா 'பி' இலக்க வண்டித்தடத்தினைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத் தகுதியுடையவரா?

3. அவசியத்தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்கப்படாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்படக்கூடியதா?

4. வழக்கு செலவுத்தொகையை வாதிகளுக்கு கொடுக்க பிரதிவாதி கடமைப்பட்டவரா?

5. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

7. <u>மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த குறிப்பாணையின் விபரங்கள் :</u>

பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும் சாட்சியத்திற்கும் எதிரானது என்றும், மேல்முறையீட்டாளர் முன்னிட்டுள்ள ஆவண சாட்சியங்களையும், வாய்மொழி சாட்சியத்தையும் விசாரணை நீதிமன்றம் முறையாக கருத்தில் கொள்ளத் தவறியுள்ளது என்றும், விசாரணை நீதிமன்றம் வனைந்துள்ள வழக்கெழு வினாக்களானது தவறானது என்றும், தரப்பினர்களின் பிரச்சனை தீர்ப்பதற்கு போதுமான வழக்கெழுவினா அல்ல என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கின் கருத்துக்களை தவறாக புரிந்துகொண்டுள்ளது என்றும், மேல்முறையீட்டாளருக்கும் அவரது சகோதரிகளுக்கும் இடையே வாய்மொழி

பாகம் ஏற்படவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், 3 ஏக்கர் 48 செண்ட்டை தனது மனைவியும் அவரது சகோதரிகளும் வாய்மொழியாக பாகம் பிரிந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும், அதனால் வாய்மொழி பாகமானது வாதியால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், மேலும் பி.வா.சா.1 வாய்மொழி பாகத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும், அவர் எந்த காலத்திலும் வாய்மொழி பாகத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்றும், மேல்முறையீட்டாளர் மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.197/2025 என்ற வழக்கினை தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றும், உரிய ஆவணங்கள் மூலம் வாய்மொழி பாகத்தை எதிர்மனுதாரர் நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதி தாவா சொத்தினை ரத்தினம், மயில்சாமி ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றுள்ள நிலையில் அவர்களை விசாரித்து வழக்கினை நிரூபணம் செய்யவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், மேலும் தாவா இரண்டு சொத்துக்களும் வெவ்வேறு சொத்துக்கள் என்றும், அதில் உள்ள வழக்குமூலம் வெவ்வேறானது என்றும்,அ.வ.எண்.196/2003 வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பினராக இல்லாத நிலையில் அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மேல்முறையீட்டாளரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும் அ.வ.எண்.196/2003 வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் தாவா பி செட்யூல் சொத்தைப் பொறுத்து வாதி தரப்பில் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் வண்டித்தடத்தை பொறுத்து நீதிமன்ற ஆணையர் நியமனம்

செய்து வாதியால் எடுத்துக்காட்டப்படவில்லை என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் வருவாய் துறை ஆவணங்கள் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை மட்டும் வைத்து கருத்திற்கொண்டு முடிவிற்கு வந்துள்ளது என்றும், வாதி தரப்பில் தாவா பி செட்யூல் வண்டித்தடத்தைப் பொறுத்து தெளிவுப்படுத்தவில்லை என்றும், வண்டித்தடமானது வாதி, பிரதிவாதிகளின் பொது பாதையாக இருப்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கமுடியாது என்றும், எனவே, இம்மேல்முறையீட்டை அனுமதித்து, பொள்ளாச்சி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.492/2013 ல் 10.12.2024 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து மேல்முறையீட்டு வழக்கை மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கக் கோரியுள்ளார்.

8) இந்த மேல்முறையீட்டின் 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்த நிலையில் வழக்கானது அனுமதிக்கப்பட்டு தீர்ப்பாணை வழங்கியுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மீது இந்த மேல்முறையீடானது மனக்குறைவுற்ற 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மேல்முறையீட்டில் இருதரப்பிலும் சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

9) இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில் இம்மேல்முறையீடு அனுமதிக்கப்பட வேண்டியதா? என்பதேயாகும்.

10) **<u>தீர்வு</u>** :-

வாதுரையின் வசதிக்காக விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்களோ அதேபோல் இந்த மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுவார்கள்.

10.1) விசாரணை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த வழக்குரையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது தாவா ஏ செட்யூல் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், தாவா பி செட்யூல் சொத்தான வண்டித்தடத்தை பொறுத்து எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது விசாரணை நீதிமன்றத்தில் வாதிக்கு சாதகமாக வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் 1ம் பிரதிவாதி தரப்பில் இந்த மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பையும், வழக்காவணங்களையும் ஒருசேர பரிசீலனை செய்யும்போது தாவா சொத்தானது வாதி, பிரதிவாதிகளின் பரம்பரை சொத்து என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தைப் பொறுத்து தரப்பினர்களான வாரிசுகளுக்குள் பாகம் ஏற்பட்டு அவரவருக்கு தனித்தனியாக பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்து வருகின்றனர் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

10.2) இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது பி.வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 3 ஏக்கர் 48 செண்ட்டை தனது மனைவியும் அவரது சகோதரிகளும் வாய்மொழியாக பாகம் பிரிந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல என்பதை சுட்டிக்காட்டியும் விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட சாட்சியத்தை கவனத்தில் கொள்ளவில்லை என்றும், அதனால் வாய்மொழி பாகமானது வாதியால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், மேலும் பி.வா.சா.1 வாய்மொழி பாகத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும், அவர் எந்த

காலத்திலும் வாய்மொழி பாகத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்றும், மேலும் பி.வா.சா.1 சாட்சியத்தில் வாய்மொழி பாகத்தை மறுத்து தான் உள்ளார் என்றும், வருவாய் துறை ஆவணங்கள் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை வைத்து மட்டும் வாய்மொழி பாகம் ஏற்பட்டுவிட்டது என்று எடுத்துக்கொள்ள இயலாது என்றும், அதனை விசாரணை நீதிமன்றம் கவனத்திற்கொள்ளாமல் முடிவிற்கு வந்துள்ளது என்றும், அ.வ.எண்.196/2003 வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பினராக இல்லாத நிலையில் அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மேல்முறையீட்டாளரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும் விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை பரிசீலனை செய்யும்போது பிரதிவாதிகள் எவ்வாறு தாவா ஏ செட்யூல் சொத்தினைப் பொறுத்து இடையூறு செய்தார்கள் என்பதை தெளிவாக குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மேலும் தாவா பி செட்யூல் சொத்தைப் பொறுத்து வாதி தரப்பில் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மேலும் தாவா இரண்டு சொத்துக்களும் வெவ்வேறு சொத்துக்கள் என்றும், அதில் உள்ள வழக்குமூலம் வெவ்வேறானது என்றும், ஆகவே இந்த மாதிரியான வழக்குகளை அனுமதிக்கக்கூடாது என Sundaram Finance Limited Vs NEPC India Ltd AIR 1999 SC 626 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது என்றும், வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் வண்டித்தடத்தை பொறுத்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து வாதியால் எடுத்துக்காட்டப்படவில்லை என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் வருவாய் துறை ஆவணங்கள் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை மட்டும் வைத்து கருத்திற்கொண்டு முடிவிற்கு வந்துள்ளது என்றும், வாதி தரப்பில் தாவா பி செட்யூல் வண்டித்தடத்தைப் பொறுத்து தெளிவுப்படுத்தவில்லை என்றும், வண்டித்தடமானது வாதி, பிரதிவாதிகளின் பொது பாதையாக இருப்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்

கட்டளை பரிகாரம் வழங்கமுடியாது என்றும், ஆகவே விசாரணை நீதிமன்றமானது வழக்கை தள்ளுபடி செய்யாமல் அனுமதித்துள்ளது சரியானதல்ல என்றும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கூட்டுரிமையாளருக்கு (Co–owner) எதிராக கேட்க இயலாது என்றும், அதனால் மேல்முறையீட்டை அனுமதிக்கவேண்டுமென்று வாதிட்டார்.

10.3)அதனை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றமானது ஆவணங்களையும், சாட்சியங்களையும் குறிப்பாக பி.வா.சா.1ன் சாட்சியத்தில் கண்ட ஒப்புதல்களை கருத்திற்கொண்டு முடிவிற்கு வந்துள்ளது என்றும், மேலும் பி.வா.சா.1 சாட்சியத்தில் வாய்மொழி பாகத்தை பொறுத்து அது ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதனால் பி.வா.சா.1ன் சாட்சியத்திலிருந்து வாய்மொழி பாகம் ஏற்பட்டுவிட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், வருவாய்துறை ஆவணங்கள் வாய்மொழி பாகத்தின் காரணமாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்திற்கொண்டு முடிவிற்கு வந்துள்ளது என்றும், அதனால் வாய்மொழி பாகம் விசாரணை நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுவிட்டது என்றும், மேலும் எதிர்வழக்குரையில் வாய்மொழி பாகம் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலும் தாவா பி செட்யூல் வண்டித்தடத்தை பொறுத்து தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்றும், ஆகையால் விசாரணை நீதிமன்றம் வழக்காவணங்களை சரியாக பரிசீலனை செய்து முடிவிற்கு வந்துள்ள நிலையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறுக்கிட வேண்டிய அவசியம் எழவில்லை என்றும், அதனால் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

10.4) இந்த நிலையில் வாதி தரப்பில் கூறியுள்ளவாறு வாய்மொழி பாகம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதை பொறுத்து இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பையும், பி.வா.சா.1ன் சாட்சியத்தையும் பரிசீலனை செய்யும்போது பி.வா.சா.1 சாட்சியத்தில் தனது மாமனாருக்கு ஒதுக்கிய 3 ஏக்கர் 48 செண்டில் நாச்சிமுத்து கவுண்டரான தனது பெரிய மாமனாருக்கு எவ்வித பாத்தியதை இல்லை என்றால் சரிதான் என்றும், தனது பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் தனது மனைவியும், அவரது சகோதரிகள் வாய்மொழியாக பாகம் பிரித்து தனிப்பட்டா பெற்று அனுபவித்து வந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், தனது மனைவி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பக்கம் 2ல் தனது மனைவியும், அவரது சகோதரிகளும் அவரவர் வசதிக்கு ஏற்றாற்போல் பிரித்து அனுபவித்து வருவதாக கூறியள்ளார் என்றால் சரிதான் என்றும், அதுபோல் பிரித்த சொத்துக்களை தனது மனைவி அவரது பங்கை தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் என்றும், அதேபோல் மயில்சாமிக்கும், ரத்தினத்துக்கும் வந்த சொத்துக்களை அவர்கள் தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் என்றும், 141ல் வடகோட்டில் கிழமேல் நீளியாக 1 ஏக்கர் 16 செண்ட் தனது மனைவிக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான் என்றும், மயில்சாமிக்கும், ரத்தினத்துக்கும் கிழமேல் நீளியாக 2 ஏக்கர் 32 செண்ட் அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான் என்றும், அவரவர்கள் அனுபவித்து வந்த பூமிகளை அவரவர் பூமிகளுக்கு உட்பட்ட சக்குபந்திகளுக்கு உட்பட்டு தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான் என்றும், தாழ்வான பகுதியில் உள்ள 3 ஏக்கர் 12 செண்ட்டில் வடகோட்டில் 1 ஏக்கர் 4 செண்ட் தனியாக 141/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், 141/2 மேல்புறமாக ஒட்டி உள்ள மேட்டுப்பகுதியில் இருக்கும் 12 செண்ட்டை

தனது மனைவி தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10.5) மேலும் 141/3 மேல்புறமாக ஒட்டி உள்ள மேட்டுப்பகுதியில் இருக்கும் 24 செண்ட்டை ரத்தினமும், மயில்சாமியும் தனியாக குடிசை போட்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான் என்றும், உட்பிரிவு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு அவரவர்களுக்கு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான் என்றும், 141/3 மேல்புறமாக ஒட்டி உள்ள மேட்டுப்பகுதியில் இருக்கும் 24 செண்ட்டை ரத்தினமும், மயில்சாமியும் தனியாக அனுபவித்து வந்த மேற்படி 24 செண்ட் காலை எண்.141/1க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான் என்றும், தனது மனைவி அனுபவித்து வரும் 12 செண்ட் நிலமானது 141/1ல் வடகோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான் என்றும், அதனை ஒட்டி தென்புறம் ரத்தினம், மயில்சாமி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் என்றும், மேற்படி 24 செண்ட் நிலத்தை ஒட்டி தென்புறமாக இருக்கும் 14 செண்ட் நிலமானது நாச்சிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் என்றும், அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 141/3, 141/1ல் மேல்புறம் உள்ள மேட்டுப்பகுதியில் இருக்கும் 24 செண்ட்டையும் மயில்சாமி, ரத்தினத்திடமிருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் என்றும், ஆனால் அதற்கான தாய் பத்திரம் இல்லை என்றும், தாய் பத்திரம் என்றால் தனது மாமனார் ஏற்படுத்திய செட்டில்மெண்ட்டான வா.சா.ஆ.3, 4, மற்றும் 5 கிரைய பத்திரம் தாய் பத்திரம் என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1 கிரைய பத்திரப்படி வாய்மொழியாக தங்களுக்கு வந்த பாகத்தை தான் கிரையம் கொடுப்பதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான் என்றும், மயில்சாமிக்கும், ரத்தினத்துக்கும், தங்களுக்கும் எவ்வித விரோதமும் கிடையாது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள உட்பிரிவுகள், சக்குபந்திகள்

சரியானவை என்றால் சரிதான் என்றும், அந்த கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை வாதி சண்முகவேல் தான் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் என்றும், பி அட்டவணையில் உள்ள வண்டித்தடமானது வா.சா.ஆ.14 ல் கண்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.14 பாகப்பத்திரப்படி வாதி அவரது வகையறாக்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் என்றும், அதனால் தாவா பி அட்டவணை சொத்தை இடைஞ்சல் செய்ய தனக்கு உரிமையில்லை என்றால் சரிதான் என்றும், தாவா பி அட்டவணை சொத்தின் வழியாக தான் தன்னுடைய 140 காலைக்கு செல்லவேண்டும் என்றும், தான் செல்வதை வாதி ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், வாதி அனுபவிப்பதை தான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

10.6) மேற்கண்ட பி.வா.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது அவர் தெளிவாக வாய்மொழி பாகத்தை பொறுத்தும், தாவா பி செட்யூல் சொத்தில் கண்ட வண்டித்தடத்தை பொறுத்தும் பி.வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தெளிவாக இடைஞ்சல் செய்ய தனக்கு உரிமையில்லை என்றால் சரிதான் என்றும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே பி.வா.சா.1 சாட்சியத்தில் கண்ட ஒப்புதல்கள் (Admissions) வாதிக்கு சாதகமாக உள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் விசாரணை நீதிமன்றத்தில் இந்த வழக்கில் கண்ட எதிர்மனுதாரரான வாதி தரப்பு வழக்கறிஞர் **1997 (1) MLJ Page 445** என்ற முன்தீர்ப்பை தாக்கல் செய்து எதிர்தரப்பினரின் ஒப்புதல்கள் அந்த வழக்கை தீர்மானிக்க முக்கியமான சங்கதி என்று குறிப்பிட்டுள்ள முன்தீர்ப்பை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் **2003 (1) MLJ Page 326** என்ற முன்தீர்ப்பிலும் எதிர்தரப்பினரின் ஒப்புதல்களை கருத்திற்கொண்டு

வழக்கை தீர்மானிக்கலாம் என்று கண்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

மேலும் **2021 – 4 – LW 272** என்ற முன்தீர்ப்பை எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டி In the instant case though the suit is one for bare injunction, however the plaintiff has provided the documents of tittle under which they claim to be in possession of the property and the plaintiff has also adduced evidence in support of the said document. Further DW1 in his cross has stated that the defendants are ready to purchase the suit property for a sum of Rs.1,00,000/- which only goes to show that the defendants have recognized the plaintiffs right to the suit property. The plaintiff therefore established a prima facie case of tittle and therefore the suit filed simpliciter for a bare injunction is maintainable என்று குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டி வாதிட்டார். அதனை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது வாதி தரப்பில் சுவாதீனத்தை காட்டுவதற்கான ஆவணங்கள், சாட்சியங்கள் தெளிவாக இருக்கும் நிலையில் அதனை வைத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தை தீர்மானிக்கலாம் என்று கண்டுள்ளது.

10.7) ஆகவே இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாதி தரப்பு சான்றாவணங்களையும், பி.வா.சா.1 ன் ஒப்புதல்களையும் கருத்திற்கொள்ளும்போது பி.வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளது என்பதையும், வாதி தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதையும் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது. ஆகவே பி.வா.சா.1 ன் சாட்சியம் வாதிக்கு சாதகமாக உள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக முடிவிற்கு வந்துள்ளது சரியானது என்றே இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. ஆனால் இந்த வழக்கில் தாவா பி செட்யூல் சொத்தைப் பொறுத்து

மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டபோது கூட்டுரிமையாளருக்கு (Co–owner) எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கமுடியாது என்று கூறியுள்ள நிலையில் அது உண்மையான சங்கதி என்ற நிலையில் பி.வா.சா.1 ன் சாட்சியத்தில் தெளிவாக பி அட்டவணையில் உள்ள வண்டித்தடமானது வா.சா.ஆ.14 ல் கண்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.14 பாகப்பத்திரப்படி வாதி அவரது வகையறாக்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் என்றும், அதனால் தாவா பி அட்டவணை சொத்தை இடைஞ்சல் செய்ய தனக்கு உரிமையில்லை என்றால் சரிதான் என்றும், தாவா பி அட்டவணை சொத்தின் வழியாக தான் தன்னுடைய 140 காலைக்கு செல்லவேண்டும் என்றும் தெளிவாக சாட்சியம் அளித்த நிலையில் பிரதிவாதி, வாதிக்கு தாவா ஏ செட்யூல் சொத்திலும், பி செட்யூல் சொத்தில் உள்ள சுவாதீனத்தை ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் அது வாதிக்கு சாதகமாக உள்ள நிலையில் அதனை விசாரணை நீதிமன்றம் தெளிவாக கண்டறிந்து முடிவிற்கு வந்துள்ள நிலையில் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாய்மொழி பாகத்தை ஒத்துக்கொண்டுள்ள நிலையில் பி.வா.சா.1 ன் சாட்சியத்தில் கண்ட ஒப்புதல்களின் அடிப்படையில் வாய்மொழி பாகம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் வாதி தரப்பில் பாத்தியத்தை காட்டுவதற்கான ஆவணங்கள், வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு சுவாதீனம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் அதனை தெளிவாக கண்டறிந்து முடிவிற்கு வந்துள்ள நிலையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறுக்கிடவேண்டிய அவசியம் இல்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

11) இறுதியாக,

1) இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) இவ்வழக்கின் செலவுத் தொகைகளை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர், என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M MANIKANDAN
Digitally signed by M MANIKANDAN
Date: 2026.04.29 18:47:09 +0530

சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

இரு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

M MANIKANDAN
Digitally signed by M MANIKANDAN
Date: 2026.04.29 18:47:17 +0530

சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**நகல்**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி.

**Draft/Fair Judgment**
A.S.No.12/2025
29.04.2026